(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **162**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 ஏப்ரல் 28, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**அதிமேதகு சனாதிபதியின் கூற்றின்படி பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்காக அதிமேதகு சனாதிபதியின் பின்வரும் கூற்றினை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் வாசிப்பாராக:**

''அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் செய்யப்படும் பிரகடனம்''

மைத்திரிபால சிறிசேன

இத்தோடுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்யும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) 17 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று பிறப்பிக்கப்பிக்கப்பட்டுள்ளமையாலும், குறிப்பிட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளைப் பேணுவது சனசமூகத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமானதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளமையாலும், அது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவின் பிரகாரமும், அதன் 2 (3) ஆம் பிரிவு சேர்த்து வாசிக்கப்படுகையில் இப்பிரகடனம் குறித்துப் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமென்ற பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாலும்,

முத்திரை

அத்தோடு குறிபிட்ட பிரகடனம் விடுக்கப்பட்ட திகதியில் பாராளுமன்றம் பத்துத் தினங்களுக்கு மேற்படாத வகையில் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இருந்தாலும்,

சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், அரசியலமைப்பு உறுப்புரை 70 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இப் பிரகடனத்தின் மூலம் குறிப்பிட்ட அத்தியாவசிய சேவைகள் பிரகடனம் சம்பந்தமாகப் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்காக பாராளுமன்றத்தை 2017, ஏப்பிறல் 28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கூடுமாறு கட்டளையிடுகின்றேன்.

இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமானாரின் ஆணைப்படி,

பி.பீ. அபேகோன்,

சனாதிபதியின் செயலாளர்"

**அட்டவணை**

உள்ளூராட்சி சபையொன்றினால் புரியப்படும் அல்லது பேணப்படும் ஏதாவது விபரிப்புகளைக் கொண்ட சகல சேவைகளும், பணியும் அல்லது உழைப்பும் அத்தகைய

உள்ளூர் அதிகார சபையால் அதற்காக அல்லது அதன் சார்பில் செய்ய அவசியமான அல்லது செய்யப்பட வேண்டியவிடத்து வீதிக் கழிவுகள், வீட்டுக் கழிவுப்பொருட்கள், அல்லது அத்தகைய வேறு ஏதாவது பொருட்களை அப்புறப்படுத்தல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், தற்காலிக நிலையில் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், தனிவேறாக்குதல், தொற்று நீக்கப்படுதல், கைதவிர்ப்பு அல்லது விற்பனை.

**2. சனாதிபதியிடமிருந்து கிடைத்த செய்தி:** அதிமேதகு சனாதிபதியிடமிருந்து கிடைத்த கீழ் பிரசுரிக்கப்பட்ட செய்தியை சபாநாயகர் வாசித்தார்.

**"இலங்கை சனாதிபதி**

**எமது இலக்கம்: சீஎஸ்ஏ/1/44**

**2017 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி**

**கௌரவ கரு ஜயசூரிய**
**சபாநாயகர்**
**இலங்கைப் பாராளுமன்றம்**

**கௌரவ சபாநாயகரே,**

**(40 ஆவது அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்**

(40 ஆவது அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 17 ஆவது பிரிவினூடாக எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகளைப் பேணிச் செல்வதற்காக பொதுமக்கள் நலனினைக் கவனத்திற்கொண்டு தேவையானதெனக் கருதி 2017.04.20 ஆம் திகதிய 2015/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளும் அதனோடிணைந்த பணிகள் அத்தியாவசியமானவை என கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற், மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) ஆம் பிரிவின் பிரகாரம் அவ்விடயத்தினை பாராளுமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
விசுவாசமுள்ள,

மைத்திரிபால சிறிசேன"

3. **சபாநாயகரின் அறிவித்தல்கள் :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:

**I**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் '**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்) '** எனும் சட்டமூலத்தில், 2017 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி என்னால் சன்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்"

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் '**வெளிநாட்டுச் செலாவணி'** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்"

**4. குழு அறிக்கைகள் சமர்ப்பணம் :** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன், அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம்", "விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகள்", "சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானங்கள்", "துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை" மற்றும் "உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பாராளுமன்ற அமர்வு (இல. 1) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 9.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார் ,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2017 மே மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு (மீதொட்டமுள்ள குப்பை மேடு சரிந்து விழுந்தமையால் நிகழ்ந்த அனர்த்தம்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 11.42 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார். )

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.28 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார். )

அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

பாராளுமன்றம் அதன் பிரகாரம் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2017 மே மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 வரை ஒத்திவைக்கப்பட்டது.